Registered as a Newspaper

YOUR FRIENDS
IN
FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள்
நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
UNICO FINANCE LTD.

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை:
ரூ. 1-25

சுடர் 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞு சித்திரை மீ 24 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 றம்ழான் பிறை 08 07-05-1987 UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 137

YOUR FRIENDS
IN
FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள்
நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
UNICO FINANCE LTD.

யாழ். ஆஸ்பத்திரியின் தலைவிதி இன்று தெரியும்

ஜனாதிபதியுடன் பேச்சு

யாழ்ப்பாணம் மே 7

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி நாளையுடன் மூடப்படுமா அல்லது அரசின் முந்திய முடிவில் மாற்றம் எதுவும் செய்யப்படுமா என்பது இன்று தெரியவரும்.

அதாவது நாளை எண்பது வயதைப் பூர்த்தி செய்யும் வடமாகாணத்தின் பிரதம ஆஸ்பத்திரியின் தலைவிதி இன்று தெரியவரும்.

அரசாங்க அதிபர் தலைமையில் சென்ற விசேட தூதுக்குழு ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவை இன்று சந்தித்துப் பேச்சு நடத்தும். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியை மூடிவிடுவது என்ற முடிவை மீள் பரிசீலனை செய்து அதற்கான உத்தரவை வாபஸ் பெறுமாறு தூதுக்குழு ஜனாதிபதியிடம் வற்புறுத்தும். யாழ் ஆஸ்பத்திரியை மூடுவதால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை ஜனாதிபதிக்கு எடுத்துரைக்கும்.

அரசாங்க அதிபர் திரு. வை மு பஞ்சலிங்கம், யாழ் பெரியாஸ்பத்திரிப் பணிப்பாளர் டாக்டர் எஸ் நச்சினார்க்கினியன், அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்க யாழ் கிளைத் தலைவர் டாக்டர் எஸ் சிவகுமாரன், யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் சிவஞானசுந்தரம், டாக்டர் ஜே ரி சேவியர், டாக்டர் ஜெயசீலன் டாக்டர் வி பிலிப்ஸ் சட்டத்தரணி திரு. எஸ் பாலசுப்பிரமணியம் திரு. கே சிவஞானம் ஆகியோர் அடங்கிய விசேட குழு நேற்றுக் காலை இங்கிருந்து கொழும்பு புறப்பட்டது.

இக்குழு முதலில் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்க தாய்ச் சங்கப் பிரமுகர்களுடன் கலந்தாலோசிக்க ஏற்பாடாகி இருந்தது.

அதன் பின் அவர்களில் ஒருவரையும் குழுவில் சேர்த்துக்கொண்டு போதனா ஆஸ்பத்திரிகள் அமைச்சர் திருமதி சுனேத்திரா ரணசிங்கவைச் சந்திக்கும். அதன் பின்னர் விசேட குழு ஜனாதிபதியைச் சந்திக்கும்.

சந்திப்பின் விளைவு இன்று மாலை யாழ்ப்பாணத்துக்குத் தெரியவரும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்புப் பேச்சு விவரத்தை அறிந்து கொள்ள டாக்டர் ஒருவர் வவுனியாவில் தங்கி நிற்கிறார். அவர் மூலம் மாலையில் இங்கு செய்தி கிடைக்கும் என அறியவந்துள்ளது.

விசேட குழு கொழும்

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



பாத்தியே பாத்தியே, உவை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியை தெல்லிப்பளைக்கும், மந்திகைக்கும் மாற்றச் சொல்லுகினம்

ஆனா மந்திகை ஆஸ்பத்திரி ஷெல்லால அதிர்ந்திருக்கு... மொத்தத்தில தமிழ் நோயாளியளை மண்ணுக்குக் கிழை அனுப்புற திட்டங்கள் தான்..! யோசியுங்கோ......!!

மருத்துவபீட மாணவர் இன்று ஊர்வலம்

யாழ்ப்பாணம், மே 7

யாழ். வைத்தியசாலை இடம் மாற்றத்தை எதிர்த்து இன்று மருத்துவ பீட மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்துகிறார்கள்.

யாழ் போதனா வைத்தியசாலையை மூடுவதற்கான அரசாங்கத்தின் எதேச்சையான முடிவுக்கு எதிராகவும் யாழ். குடாநாட்டின் வைத்திய சேவையின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெறுகிறது.

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட முன்றலில் காலை பத்து மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஊர்வலம் பிரதான வீதிகள் ஊடாகச் சென்று யாழ் போதனா வைத்தியசாலையை அடையும்.

ஊர்வலத்தில் சகல மாணவர்களும், அரச ஊழியர்களும், தொழிலாளர்களும் கலந்து கொள்ளும்படி மருத்துவ பீட மாணவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-10)

கொழும்பில் 26 இளைஞர் நேற்றுக் கைது

கொழும்பு, மே 7

நேற்று கொழும்புப் பகுதியில் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் 26 இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 11 பேர் வைத்தியத்துறை மாணவர்கள் ஆவர்.

அரசின் முடிவு கொடூரமானது;

யாழ் ஆஸ்பத்திரி விவகாரம் தொடர்பாக கூட்டணி அறிக்கை

சென்னை, மே 7

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியை மூடிவிட அரசாங்கம் எடுத்துள்ள முடிவு கொடூரமான ஒரு குற்றம் ஆகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொலிட் பீரோ மேற்கண்டவாறு கண்டனம் தெரிவித்துள்ளது.

கூட்டணியின் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது:-

இலங்கையில் தமிழர் கொல்லப்படும் முறை, தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்படும் முறை ஆகியன வெளிநாட்டுக் கூலிப் படையினரின் ஈடுபாட்டையே காட்டுகிறது.

தமிழர் வகை தொகை இன்றிக் கொல்லப்படுகின்றனர். கிராமங்கள் எரியூட்டப்படுகின்றன.

தமிழரை இலங்கையில் இருந்து அழித்துவிடும் திட்டத்தின் கீழ் இவை செய்யப்படுவதாகத் தோன்றுகின்றது.

ஒரு புறம் பொருளாதார முற்றுகை, மறுபுறம் குண்டுமாரி இவற்றின் மத்தியில் யாழ் ஆஸ்பத்திரியை மூடிவிட அரசு முடிவு செய்துள்ளது. இது ஓர் அத்துமீறிய குற்றமாகும்!—

பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அனுமதிக்கப்பட வேண்டும்.

இது சம்பந்தமாக கொழும்பை, ஐ. நா. மனித உரிமைக் கமிஷன் வற்புறுத்த வேண்டும்.

இப்படி கூட்டணி விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-ஏ)

நகரில் நேற்று

ஹெலியை நோக்கி திடீர் தாக்குதல்!

யாழ்ப்பாணம், மே 7

யாழ் நகரின் மேலாக பறந்து கொண்டிருந்த ஹெலிக்கொப்டர் மீது நேற்று திடீர்த் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. தாக்குதலில் இருந்து தப்பிய ஹெலிக்கொப்டர் அதி உயரத்துக்குப் பறந்து சென்று யாழ் நகரப் பகுதியை நோக்கி சரமாரியாக 50 கலிபர் தாக்குதலை நடத்தியது.

இதன் காரணமாக கிராண்ட் வீதி, கஸ்தூரியார் வீதி ஆகிய இடங்களில் உள்ள பல கடைகளின் ஓடுகள், சீற்றுகள் சேதமடைந்தன.

வீதிகளில் இரண்டு அங்குல ஆழக் குழிகள் காணப்பட்டன.

எனினும் போராளிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தியதை அடுத்து ஹெலிக்கொப்டர் பறந்து சென்றது (இ 10)

பெண் போராளி காயம்

யாழ்ப்பாணம், மே 7

இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலினால் பெண் போராளி ஒருவர் நேற்று சிறு காயமடைந்தார் (இ-10

அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

ஸ்ரீ. ல. சு. க. கொண்டுவரும்

கொழும்பு, மே 7

அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வரப்போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

மக்கள் ஐக்கிய முன்னணியும் இதற்கு ஆதரவளிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

40 காரணங்களை முன்வைத்து இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவிருப்பதாக சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நடந்த செவ்வாய்க்கிழமை செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

தேர்தல் ஒன்றின் மூலமே பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

திரு ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருக்கும் வரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

வெளிநாட்டுக் கூலிப் படைகளை நாட்டுக்குள் கொண்டு வந்ததன் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வாய்ப்பை அரசு மோசமாக்கி விட்டது

இப்படி திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார். (இ-ஏ)

● மேலதிக மின்சாரக் கட்டணம்

கொழும்பு, மே 7

இன்று வியாழக்கிழமை தொடக்கம் மேலதிக மின்சாரக் கட்டணம் அறவிடப்படும்.

நீர் மின்சார உற்பத்திக்குத் தேவையான தண்ணீர் மூன்று பிரதான நீர்த்தேக்கங்களிலும் குறைந்து விட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

● மண்டாவில் ஹெலி தரை இறங்கியது

வல்வெட்டித்துறை, மே 7

மண்டான் இராமப்பிள்ளையார் கோவில் வெளியில் ஹெலிக்கொப்டர் ஒன்று திடீரென தரை இறங்கியது

செவ்வாய் மாலை 5 30 மணியளவில் சன நடமாட்டம் இல்லாத நேரத்தில் தரை இறங்கிய ஹெலிக்கொப்டரில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர் உட்பட ஐவர் பணயம்

கொழும்பு, மே 7

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட எட்டுப் பட்டதாரி மாணவர்கள் விடுவிக்கப்படும்வரை, விரிவுரையாளர் உட்பட ஐந்து பேரை ஏனைய பட்டதாரி மாணவர்கள் பணயமாக வைத்து உள்ளனர்.

கொழும்பு பல்கலைக் கழகத்திலுள் இவர்கள் பணயம் வைக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக் கழகத்தைச் சுற்றி ஆயுதம் தரித்த பொலிஸார், கலவரம் அடக்கும் படையினர் காவல் நிற்கின்றனர்.

பணயம் வைக்கப்பட்டுள்ளவர்களில் ஒருவர் பெண்.

"இச் சம்பவம் பற்

(4ஆம் பக்கம் பார்க்க)

மந்திகை ஆஸ்பத்திரி ஷெல்லினால் அதிர்வு

நோயாளர்கள் ஓட்டம்

வல்வெட்டித்துறை, மே 7

ஷெல் தாக்குதலால் மந்திகை ஆதார வைத்தியசாலை அதிர்ந்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஏழு மணி அளவில் பருத்தித்துறை இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஒரு ஷெல் மந்திகை ஆதார வைத்தியசாலையின் கிழக்குப்புறமாக உள்ள உபய இராம முருகன் வீதியில் விழுந்து வெடித்தது.

இதனால் வைத்தியசாலையே அதிர்ந்தது. நோயாளர் பலர் வெளியே ஓடினர் எவருக்கும் காயமோ சேதமோ ஏற்படவில்லை.

இப்பகுதியில் ஹெலிக்கொப்டர் நடமாட்டம் கடுமையாக இருந்தது (இ-ஏ-160)

யாழ் செயலகம் தொடர்ந்து ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், மே 7

நேற்றும் யாழ் செயலக அரச திணைக்கள அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தன.

போதனா வைத்தியசாலையை அகற்றக்கோரும் அரசின் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவே அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தன.

வைத்தியசாலையை அகற்றுவது தொடர்பான அரசின் நடவடிக்கைகள் நிறுத்தப்படும் வரை ஊழியர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடரும் என பல ஊழியர்கள் தெரிவித்தனர். (இ-ஏ)

சுபநேரம்

07-05-1987
வியாழக்கிழமை
சுபநேரம்:-
7-25 முதல் 8-55 வரை
ராகுகாலம்:-
1-25 முதல் 2-55 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
நவமி முன்னிரவு 8.16 வரை

நேற்றும் வழமை போல் இயங்கியது

யாழ்ப்பாணம், மே 7

யாழ் ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் பகுதி வழமைபோல் இயங்கி வருகிறது.

நாளை வெள்ளிக்கிழமையுடன் ஆஸ்பத்திரியை மூடுமாறு ஸ்ரீ லங்கா அரசு உத்தரவிட்டும் நோயாளர்கள் வருகை குறையவில்லை.

வழமையான கிளினிக்குகளும் யாழ் ஆஸ்பத்திரியில் நடைபெற்று வருகின்றன.

அவசர நோயாளர்களும் சிகிச்சைக்காக வார்ட்டுகளில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். (இ-10)

● பதுங்கு குழியில் பிறந்தகுழந்தை

எலாலி, மே 7

இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின் போது பதுங்குகுழிக்குள் இருந்த பெண் ஒருவர் பதுங்கு குழிக்குள்ளேயே ஆண் குழந்தை ஒன்றை பிரசவித்தார்.

அச்சுவேலியில் உள்ள பத்தமேனிக் கிராமத்தில் [illegible] இச் சம்பவம் நடைபெற்றது

வசாவிளானில் இருந்து இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்த இப்பெண் [illegible] வந்திருந்தார். (இ-119)

கடை திறப்புவிழாவில் கலந்து கொண்டோர் மீது ஹெலி தாக்குதல்!

மாலர் பாடசாலை ஆசிரியர் பலி!!

வேலணை மே 7

அல்லைப்பிட்டியில் நடைபெற்ற கடைத் திறப்பு விழா ஒன்றில் கலந்து கொண்டவர்களை நோக்கி ஹெலிக்கொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அங்கு நின்ற இளம் யுவதி ஒருவர் தலை பிளந்து மூளை சிதறிய நிலையில் மரணமானார்.

செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி அளவில் இச் சம்பவம் நடைபெற்றது.

சம்பவத்தில் பலியானவர் அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் அப்பகுதி மாலர் பாடசாலையின் ஆசிரியராகக் கடமையாற்றியவருமான செல்வி அந்தோனி- ரோஸ்மலர் (வயது -19) ஆவார்.

சம்பவத்தில் இருவருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டன.

சம்பவத்தைத் தொடர்ந்து மண்டைதீவு மினி முகாமிலிருந்து பல தடவைகள் குடியிருப்புப் பகுதியை நோக்கி ஷெல் ஏவப்பட்டது.

இதேவேளை காரைநகர் கடற்படை முகாமிலிருந்தும் பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. (இ-167)

பிரிவினையை ஆதரிக்க இந்தியா எடுத்த முதல் நடவடிக்கை

தமிழ் நாடு உதவிபற்றி கொல்வின்

கொழும்பு, மே 7

இலங்கைத் தமிழருக்கு உதவ எட்டுக் கோடி ரூபாவை ஒதுக்குவது என்ற தமிழக அரசின் முடிவை இந்திய மத்திய அரசு அங்கீகரித்தமை அது, பிரிவினையை ஆதரிக்க எடுத்த முதல் நடவடிக்கையாகக் கருதப்பட வேண்டும்.

இப்படி பழம் பெரும் அரசியல்வாதியும் லங்கா சமசமாஜக் கட்சித் தலைவருமான டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா தெரிவித்தார்.

மே தினத்தன்று கொழும்பில் நடந்த கலவரத்தில் காயமடைந்த டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா தனியார் ஆஸ்பத்திரி ஒன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்

அங்கு வைத்துக் கொழும்புச் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவரின் [illegible] முழுவதும் எரிகாயங்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

★ சின்னஞ் சிறு விளம்பரங்கள் ★

அறிவித்தல்

நாம் புதிய ஸ்தாபனம் ஒன்றை ஆஸ்பத்திரி வீதியிலுள்ள (Bank of Ceylon) அருகாமையில் ஆரம்பித்துள்ளோம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். கண்வைத்திய நிபுணர்களினால் சிபார்சு செய்த கண்ணாடிகளைச் சரிவரப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம். S. M. Fernando 580, 1ஆம் மாடி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1111)

தவறிவிட்டது

சைக்கிள் தவறிவிட்டது. C N 80587 இலக்கமுடைய றலி சைக்கிள் பரத்தவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் நா. இராசநாயகம் 70/11, இராசசிங்கம் வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (1249)

விற்பனைக்கு

எமது நிலையத்தில் வீட்டுத் தளபாடங்கள், பித்தளைப் பொருட்கள் மற்றும் பல பொருட்களும் மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன். 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம் சென்பற்றிக் சந்தி அருகில்.

யாழ் ஆஸ்பத்திரி விவகாரம்:

விரிவுரைகளைப் பகிஷ்கரிக்க பல்கலைக்கழக மாணவர் முடிவு

யாழ்ப்பாணம், மே 7

யாழ் போதனா வைத்தியசாலையை அகற்ற வேண்டும் என்ற அரசின் கோரிக்கை வாபஸ் வாங்கப்படும்வரை விரிவுரைகளைப் பகிஷ்கரிப்பதென யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ் கலைப் பீட மாணவப் பிரதிநிதிகள் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளதாவது-

யாழ்போதனா வைத்தியசாலை மூடப்படவேண்டும் என்ற அரசின் தீர்மானம் தமிழ் மக்களை முற்றாக அழித்தொழிக்கும் நோக்கத்துடன் எடுக்கப்பட்ட ஒரு திடீர் நடவடிக்கை ஆகும்.

இந்த நடவடிக்கையால் யாழ் மருத்துவ பீட மாணவர்களின் கல்வி நிலை முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

அரசின் அண்மைக்கால நடவடிக்கைகளால் வெளி மாவட்ட மாணவர்கள் பலர் விரிவுரைகளுக்கு சமுகமளிக்கவில்லை.

இங்கு நடந்த விமானத் தாக்குதல், ஷெல் தாக்குதல்களால் அச்சமுற்று தமது கல்வியைத் தொடர முடியாத நிலையில் உள்ளனர்.

அரச போதனா வைத்தியசாலை அகற்றும் கோரிக்கையை வாபஸ் பெற்று ஷெல், விமானத் தாக்குதல்களை உடன் நிறுத்த வேண்டும்.

இந்தக் கோரிக்கையை முன்வைத்து யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தமது விரிவுரைகளைத் தொடர்ந்து பகிஷ்கரிப்பதென மாணவர் பொதுக் கூட்டமொன்றில் முடிவுசெய்துள்ளனர்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

மக்கள் முகம்

காரைநகர் களபூமி சனசமூக நிலையம்

காரைநகர், மே 7

காரைநகர் களபூமி சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டம் திரு. கு. காராளசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நடப்புவருட நிர்வாக சபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு வி. வைத்திலிங்கம். உபதலைவர்: திரு மாணிக்கவாசகர், செயலாளர்: திரு சி மா. பொன்னம்பலம். பொருளாளர்: திரு எஸ் சங்கரப்பிள்ளை.

மற்றும் 9பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (இ)

கோதுமை வாங்க அமெரிக்க உதவி

கொழும்பு, மே 7

நாற்பத்தையாயிரம் மெட்ரிக் தொன் கோதுமை வாங்க இலங்கைக்கு மேலதிகமாக அமெரிக்க அரசாங்கம் ஐம்பது லட்சம் டொலர் பணத்தை வழங்கியுள்ளது.

பி.எல் 480 உதவித் திட்டத்தின் கீழ் அமெரிக்கா இந்த உதவியை வழங்கியிருக்கிறது.

இது சம்பந்தமான உடன்பாடு கொழும்பில் அமெரிக்கத் தூதர் ஜேம்ஸ் ஸ்பெயின், திறைசேரிச் செயலாளர் திரு. பி. மகாதேவ ஆகியோரினால் கைச்சாத்திடப்பட்டது.

கடும் வரட்சி காரணமாக இந்த மேலதிக உதவி வழங்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

இக்கோதுமை கொள்வனவினால் உள்நாட்டில் கிடைக்கும் வருமானம் நீர்ப்பாசனம் மற்றும் விவசாயம் சம்பந்தமான அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது (இ-எ)

யாழ் மாவட்ட ஆசிரியர் சம்பளம்:

காசோலைக்குப் பதில் வவுச்சர்?

யாழ்ப்பாணம், மே 7

யாழ் மாவட்ட ஆசிரியர்களின் சம்பளத்தை காசோலையாக வழங்காமல், அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு வவுச்சர்களாக அனுப்ப உள்ளதாக யாழ் கல்வித்திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்குத் தற்போது மாதாந்தச் சம்பளம் காசோலைகளாகவே வழங்கப்பட்டு வருகின்றன.

திணைக்களத்திற்குப் போதிய காசோலைப் புத்தகங்கள் வழங்கப்படாததால் தொடர்ந்து வரும் மாதங்களுக்கான சம்பளக் காசோலைகளை வழங்க முடியாதுள்ளது.

இதனால் ஆசிரியர்கள் தத்தமது பகுதியில் உள்ள வங்கிகளில் கணக்குகளை ஆரம்பிக்க வேண்டுமென்றும், அக்கணக்குகளுக்கு சம்பள வவுச்சர்கள் அனுப்பப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்,

-தற்போது கொடுக்கப்படும் காசோலைகளை மாற்றவே ஆசிரியர்கள் பெரும் சிரமப்படுகிறார்கள். இத்திட்டத்தால் அவர்கள் மேலும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று ஒரு பாடசாலை அதிபர் கூறினார்.

தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கிகள் புதிதாகக் கணக்குகளை ஆரம்பிக்க அனுமதி அளிக்க மறுக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார். (இ-ஸ)

மட்டக்களப்பில் குண்டு வெடிக்கலாம்

புலிகள் எச்சரிக்கை

மட்டக்களப்பு, மே 7

மட்டக்களப்பில் பொது இடங்களில் குண்டுகளை வெடிக்க வைக்க அரசு திட்டமிட்டுள்ளதால் பொதுமக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

புலிகளால் இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றில் கூறப்பட்டுள்ளதாவது

"தமிழ் மக்கள் அதிகமாக நடமாடும் சினிமாக் கொட்டகை, சந்தை, பஸ் நிலையம் கடைத்தெரு போன்ற பொது இடங்களில் அரச கூலிப்படையினரோ அல்லது கூலியாட்களோ குண்டுகளை வெடிக்கச் செய்யலாம்"

இப்படிக் கூறப்பட்டுள்ளது. (இ-21)

சுவீப் முடிவுகள்

தமிழீழ பாதுகாப்பு நிதி சுவீப் முடிவுகள்:

1ஆம் பரிசு G 002432
2ஆம் பரிசு U 009214
3ஆம் பரிசு B 009660

50 ஆறுதல் பரிசில்கள்:

E 002890
C 005195
G 006738
S 002358
S 006170
L 006394
N 004586
G 007119
Q 004878
D 000775
R 003133
M 003489
A 003338
B 007128
K 007217
X 007478
W 002437
H 006697
R 000279
W 004174
F 006170
C 002055
T 004094
V 008573
W 001363

L 003048
B 007430
Y 001497
Q 007788
F 000477
D 000604
P 003775
G 604178
H 009307
R 002586
U 000019
Y 009978
D 008339
F 008344
R 005035
G 003988
X 007453
V 007134
D 005601
G 003500
M 007871
Z 006145
J 005857
P 007351
R 003159

பாதிக்கப்பட்ட பெண்களின் விவரங்கள்

யாழ்ப்பாணம், மே 7

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்ட 40 வயதுக்குட்பட்ட பெண்களின் விபரங்களை உருத்திரபுரம் பாதிக்கப்பட்ட பெண்கள் நலன்புரிச்சங்கத்தினர் திரட்டிவருகின்றனர்.

இயற்கையால் வாழ்விழந்த, தனிநபர்களால் வஞ்சிக்கப்பட்ட பெண்கள் தங்கள் விபரங்களை சங்கத்திற்கு அனுப்பி வைக்கும்படி சங்கத் தலைவி சி. தாட்சாயணி அம்மா கேட்டுள்ளார்.

பாதுகாப்புக்காக மேலும் ரூ 190 கோடி!

கொழும்பு, மே 7

மேலதிக பாதுகாப்புச் செலவினமாக 190கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளது.

இதற்கான நிதி ஒதுக்கீட்டு மசோதா நாடாளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படும்.

ஏனைய அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் இருந்து மேலதிக பாதுகாப்புச் செலவினம் என்ற பெயரில் இப்பணம் பெறப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்புக்கு ஏற்கனவே 1,500 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

நாட்டின் 4,000 கோடி ரூபா வரவு செலவுத் திட்டத்தில் இது 85 சதவீதமாகும். (உ-எ)

புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 7

காங்கேசன்துறை ஹாபர்வியூ இராணுவ முகாமில் இருந்து பலாலி இராணுவ முகாமுக்கு சென்றுகொண்டிருந்த இராணுவ வண்டி மீது விடுதலைப் புலிகள் கண்ணி வெடித்தாக்குதல் நடத்தினர்;

இத்தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரம் பற்றித் தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

இதேவேளை செல்வாய கிராட்டுவலில் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக பெண் ஒருவர் கொல்லப்பட்டதாகவும்; பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

10 ஆயிரம் பட்டதாரி மாணவர் பகிஷ்கரிப்பு

கொழும்பு, மே. 7

சுமார் பத்தாயிரம் பட்டதாரி மாணவர்கள் செவ்வாயன்று தென்இலங்கையில் பல்கலைக்கழக பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

மேதினம் அன்று பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த பட்டதாரி மாணவனின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள பாணந்துறை செல்வதற்காக இப்பகிஷ்கரிப்பு இடம்பெற்றது (இ-எ)

கொழும்பு பல்கலைக்கழகத்தில்

மாணவர்கள் மீது குண்டாந்தடிப் பிரயோகம்

கொழும்பு மே 7

தடையை மீறி அரசு எதிர்ப்பு கோஷங்களை எழுப்பிய பல்கலைக்கழக மாணவர் மீது பொலிஸார் குண்டாந்தடிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு வெளியே இச்சம்பவம் கடந்த ஞாயிறு இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து நான்கு பிக்குகள் உட்பட ஒன்பது பட்டதாரி மாணவர் கைதுசெய்யப்பட்டு கொழும்பு மேலதிக நீதிவான் திரு. எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அனைவரும் இம்மாதம் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மே தினமன்று அபயராம விகாரை முன்னால் பொலிஸார் சுட்டு இருவர் உயிரிழந்ததை ஆட்சேபித்து இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

பல்கலைக்கழக வளவினுள் இருந்து மணல் அடைக்கப்பட்ட போத்தல்கள், இரும்புக்கம்பிகள் முதலியன கைப்பற்றப்பட்டன என்றும் அறிவிக்கப்படுகின்றது (உ-எ)

மண்டைதீவுப் பகுதி தொடர்ந்து இருளில்

விமோசனம் இன்றி மின்பாவனையாளர் அவதி

மண்டைதீவு, மே 7

மண்டைதீவு கிராமம் கடந்த இரண்டு வருடமாக இருளில் மூழ்கியிருக்கின்றது.

யாழ் பண்ணையில் துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை பொருத்தாத காரணத்தாலேயே இவ்வாறு இருளில் மூழ்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை பொருத்தி இப்பகுதியை வெளிச்சத்துக்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் முன்வராதது, பாரமுகமாக இருப்பது இப்பகுதி மின்பாவனையாளர்களை மிகுந்த கவலை அடையச் செய்துள்ளது.

பல ஆயிரக்கணக்காக செலவு செய்து மின் இணைப்பை பொருத்தியவர்கள் இன்று மின்வசதி இல்லாது கஷ்டமடைந்து வருகின்றார்கள்.

அருகிலுள்ள அல்லைப்பிட்டி கிராமத்தினூடாக மின் இணைப்பை பொருத்தித் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பலதடவை கேட்டும் அக்கறையில்லாது அவர்கள் இருப்பது வேதனை அளிப்பதாக பாவனையாளர்கள் கூறுகின்றார்கள். (இ-88)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

தமிழ்க் கைதிகளின் பாதுகாப்புக் குறித்து மன்னிப்புச் சபை கவலை

கொழும்பு, மே 7

இலங்கைச் சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களின் பாதுகாப்பு குறித்து மிகுந்த கவலையைத் தெரிவிக்க வேண்டியுள்ளது.

இவர்களைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்க வேண்டும்.

இப்படி சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

புறக்கோட்டை குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து வெலிக்கடை சிறையில் சிங்களக் கைதிகளினால் தமிழ்க் கைதிகள் தாக்குதலுக்குள்ளானதைத் தடுத்து நிறுத்தியது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசுக்கு பாராட்டுத் தெரிவித்தது.

இப்பாராட்டுதலை வைத்து இலங்கை அரசு பற்றிய கொள்கையை சர்வதேச மன்னிப்புச் சபை மாற்றிக்கொண்டு விட்டது என்று எடுத்துக் கொள்ளக் கூடாது.

-இப்படி சபைப் பேச்சாளர் ஒருவர் ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திடம் தெரிவித்தார்.

அரசுச் சிறைகளில் வைக்கப்பட்டுள்ள தமிழர்களைப் பாதுகாக்கத் தேவையான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும். -இப்படி இலங்கை அரசுக்கு அனுப்பியுள்ள வேண்டுகோளில் சர்வதேச மன்னிப்புச் சபையின் துணைப் பொதுச் செயலாளர்- நாயகம் லாறி கோக்ஸ் கோரியிருக்கின்றார். (உ-எ)

ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 7

இன்று வியாழக்கிழமை நடைபெறவிருந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் வருடாந்த மதிய போசன விருந்துபசாரம் நாட்டு நிலைமை காரணமாகவே ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (உ-7)

யாழ் ஆஸ்பத்திரி

மருத்துவ மாணவர், தாதியர் நிலை

கொழும்பு, மே 7

மருத்துவ மாணவர்கள், மாணவத்தாதியர்கள் பருத்தித்துறை ஆதார ஆஸ்பத்திரியில் பயிற்சியைத் தொடர்ந்து பெறலாம் என்று சுகாதார அமைச்சு அறிவித்திருக்கிறது.

வெளியிடங்களில் உள்ள போதனா ஆஸ்பத்திரிகளில் பயிற்சியைப் பெறவிரும்பும் மாணவர் தற்காலிகமாக அதற்கான ஒழுங்குகளைச் செய்துகொள்ளலாம்-

இப்படி சுகாதார அமைச்சு மேலும் அறிவித்துள்ளது (இ-எ)

தமிழ் பொலீஸார் இடமாற்றம் கேட்கின்றனர்

யாழ்ப்பாணம், மே 7

யாழ் பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றும் தமிழ் பொலீஸாரும் ஊழியர்களும் அங்கு கடமை செய்வதற்கு அச்சம் தெரிவித்து வேறிடங்களுக்கு இடமாற்றம் கோரியுள்ளனர்.

கோட்டை முகாமிலிருந்து சிப்பாய்கள் மேற்கொள்ளும் துப்பாக்கிப் பிரயோகம் காரணமாகவும் ஷெல் அடி காரணமாகவும் இவர்கள் கடமைக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது (இ-10)

கலை நிகழ்ச்சிகள் மூலம் நிதி திரட்டி உதவுக

அகதிகள் புனர்வாழ்வு கழக உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 7

பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் கலை நிகழ்ச்சிகள் மூலம் நிதி திரட்டி அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்துக்கு உதவ வேண்டும் இதனால் அகதிகள் நிவாரணம் பெறுவதுடன், எமது கலைகளும் பாதுகாக்கப்படும்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர் திரு. ஆ. கனகசபாபதி இவ்வாறு கூறினார்.

வலிகாமம் மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுக் கூட்டம் அண்மையில் சுழிபுரம் செய்கண்டான் பாடசாலையில் நடைபெற்றது.

திரு. வி. என். இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் [illegible] கனகசபாபதி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்- 1983 ஆடி மாதத்துக்குப்பின் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் 195 லட்சம் ரூபாவை பாதிக்கப்பட்ட மக்களுக்காக செலவழித்துள்ளது.

இப்பணத்தில் பெரும் பகுதி வெளிநாட்டில் உள்ள கருணையுள்ளம் கொண்டோரினால் வழங்கப்பட்டது.

பாடசாலைகளிலும், கிராமங்களிலும் 7 லட்சம் ரூபா வரை நிதி சேகரிக்கப்பட்டது.

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு விவசாயம், மாட்டுப் பண்ணை, மீன்பிடி, தையல் தொழில் செய்ய [illegible] கொடுக்கப்பட்டுள்ளன. அகதிகளுக்கு அவர்கள் வாழ வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு பாடசாலை வசதிகளும், உயர்கல்வி கற்கும் 97 மாணவர்களுக்கு உதவிகளும் வழங்கப்பட்டுள்ளது.

அவசர சிகிச்சை நிலையங்கள் பலவும் கிராமங்கள்தோறும் திறக்கப்பட்டுள்ளன.

பல இடங்களில் பல குடும்பங்களுக்கு குடியேற்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு, விவசாயநிலம், கிணறுகள் என்பனவும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன என்றார்.

சமாசச் செயலாளர் திரு. த. சிவரஞ்சன் உரையாற்றுகையில் சுழிபுரம் பிரஜைகள் குழு 15 ஆயிரம் ரூபாவை புனர்வாழ்வுக் கழகத்துக்கு வழங்கவுள்ளது என்றார். (இ-ஸ)

பிரபாகரனின் பெயர் உள்ள சிறுவனுக்கு ஏற்பட்ட அனுபவம்

படையினரால் கைதானவர்களில் பிரபாகரன் என்ற பெயருடைய ஓர் சிறுவனைச் சிப்பாய்கள் சேவி செய்து தாக்கினராம்.

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பில் 300க்கும் மேற்பட்டோர் கைதாகி வாரணி முகாமில் விசாரிக்கப்பட்டனர். இவர்களில் 7 பேர்கள் தவிர மற்றையவர்கள் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட ஒருவர் தமது அனுபவத்தைக் கூறுகையிலேயே இவ்வாறு கூறினார்.

வயது வித்தியாசமின்றி நகரில் போவோர் வருவோரை எல்லாம் சிப்பாய்கள் கைது செய்து வாரணி முகாமுக்குக் கொண்டு சென்றனர்.

எம்மைக் கண்டதும் முகாமிலிருந்த சிப்பாய்கள் பேயைக் கண்டதுபோல் ஓடிவந்து சூழ்ந்து கொண்டு பற்களை நெருமி வெருட்டினர்.

எமது பெயர்களைக் கேட்டு விசாரித்தனர்;

ஓர் சிறுவன் தனது பெயர் பிரபாகரன் என்று கூறினான்.

சிப்பாய்கள் அவனைச் சூழ்ந்து கொண்டு சேவி செய்து தாக்கினார்கள்

இவ்வாறு அவர் கூறினார் (இ-ஸ)

நீத்தார் பட்டியல்

தேவவர்த்தினி (தேவா)

தேவவர்த்தினி (தேவா) இராமநாதன் கல்லூரி(O/L) மாணவி 02-05-87இல் அகால மரணமானார். இவர் சிவஞானசுந்தரம் (உபதபாலதிபர், ஏழாலை) தங்கேஸ்வரி (ஆசிரியை ஊரெழு கணேச வித்தியாசாலை) ஆகியோரின் அன்பு மகளும் பர்வதவர்த்தினி (வதனி) சிறீமுருகதாசன் (தாசன்) (ஜேர்மனி) அருள்முருகன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சண்முகராசா (Retired Postmaster, உதயன் பத்திரிகை) ஞானவதி ஆகியோரின் பிரிய மருமகளும் ஆவார். அன்னாரது ஈமச் சடங்குகள் 03-05-87இல் ஏழாலையில் நடைபெற்றது.

தகவல்:

த. சிவஞானசுந்தரம்
புன்னாலைக்கட்டுவன் வடக்கு

(2845)

உதய சங்கற்பம்

ஆனந்தமும் அமைதியும் புறத்தே தோன்றா அவை உங்களுக்குள்ளே இருக்கின்றன.

— பகவான் சத்தியசாயிபாபா

உதயன்

இல. 15, [illegible] தொலைபேசி: 24806
மின்சார நிலைய வீதி, 22078
யாழ்ப்பாணம் 07-05-1987 த.பெ.இல. 22

நடுக்கத்தின் அர்த்தம்?

இப்போது ஆட்சியிலிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தமட்டில் வடக்கும், கிழக்கும் ஆற்றுத் தொல்லை கொடுக்கும் பிரதேசங்கள்! அந்த இரண்டு பகுதிகளிலும் தனது ஆட்சியை நிலைப்படுத்த முயன்று அது பெரும் அவதியைப் பட்டுக்கொண்டிருக்கிறது!!

அந்த அவஸ்தைக்கு முழுக்க முழுக்க அரசாங்கமே பொறுப்பாளி. சனநாயக அரசாங்கம் என்று கூறிக்கொண்டு ஓர் இன மக்களுக்கு எதிராக சனநாயக விரோத, சர்வாதிகாரக் கொடுமைகளை அது கட்டவிழ்த்து விட்டது.

சட்டரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அவர்கள் உரிமைகளை நசுக்கி ஏகாதிபத்தியம் செலுத்த முனைந்தது அதன் தொடர்ச்சியாக இராணுவ பலத்தால் சிறுபான்மை இன மக்களை அழித்தொழித்து இலங்கை முழுவதையும் ஓரினத்துக்குச் சொந்தமாக்கும் பேரினவாதத்தை நிலைநாட்டவும் முயற்சிக்கிறது.

எந்த ஓர் இனமும், தனது உரிமைகளைப் பறிகொடுத்து இன்னொரு இனத்துக்கு அடிமையாகி வாழ விரும்புவது இல்லை. அதுவும் சமத்துவ சக வாழ்க்கை முறை ஓங்கி வரும் புதுயுகத்தில் எவன் ஒருவனும் மற்றவனுக்கு அடிமைப்பட்டவனாக வாழ விரும்பமாட்டான். அதனை எதிர்த்து எழுச்சியுடன் கிளர்ச்சி செய்யவே முனைவான்.

தனது ஆட்சிப் பலத்தாலும், இராணுவ பலத்தாலும் தமிழர்களின் உரிமைகளை வழங்காமல் அடிமை கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி அரசு 1978 ஆம் ஆண்டு முதல் ஒன்பது வருடங்களாக முயன்று வருகிறது. அதுவும் கடந்த நாலு வருடகாலமாக அதன் அட்டூழியம் அதிகரித்து வருகிறது. யுத்த தர்மம், அறநீதி, ஆட்சி, மகத்துவம் எல்லாவற்றையும் மீறி அகோரத்தனம் மேலோங்கி வெறியாட்டம் நடத்தி வருகிறது அரசு. அதன் விளைவாக தமிழர்கள் அதனை எதிர்த்துப் போராடுகிறார்கள். அதனால் வடக்கும் கிழக்கும் அதற்குத் தொல்லை தரும் பிரதேசங்களாக மாறிவிட்டதில் வியப்பில்லை.

வடக்கு, கிழக்கோடு மட்டும் அரசு தனது சர்வாதிகார, சனநாயக விரோதச் செயல்களை நிறுத்திக் கொண்டதா? இல்லை! தெற்கு, மேற்கிலும் தனக்கு எதிரானவர்களை அடக்கி ஆள முனைந்தது.

சனநாயக அரசாங்கம் ஒன்று, தனக்கு எதிரான கருத்துக்களையும், அவர்களது கண்டனங்களையும் சகித்துக் கொள்ள வேண்டும்; சகித்துக் கொள்வது கட்டாயம்.

தெற்கிலும், மேற்கிலும் அரசுக்கு எதிரான சாரார் மீது, தமிழ் மக்களுக்கு எதிராக இயற்றப்பட்ட சட்டங்கள் பாவிக்கத் தொடங்கப்பட்டபோதே அப்பகுதிகளிலும் அரச விரோதக் கிளர்ச்சிக்கு அத்திவாரம் இடப்பட்டது.

காரணமின்றிக் கைது, கைது செய்யப்பட்டமை குறித்து அறிவிக்காமை, நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் நீண்டகாலம் தடுத்து வைத்தல், தடுப்புக் காவலில் வைத்துச் சித்திரவதை செய்தல், ஆயுதப்படைகளால் கொல்லப்பட்டவர்களின் சடலங்களை விசாரணை இன்றி அடக்கம் செய்தல் ஆகிய நடவடிக்கைகள் கடந்த சில மாதங்களாக தெற்கிலும், மேற்கிலும், மலைநாட்டிலும் அதிகரித்திருந்தன. அவை சர்வாதிகாரத்தின் ஆரம்ப அடிகளாகவும் அங்குக் கிளர்ச்சிக்கு இடப்பட்ட விதைகளுமாகும்.

மே தின ஊர்வலத் தடையை மீறி மேற்கிலும், தெற்கிலும் மக்கள் கூடியமை அப்பகுதிகளில் அரசுக்கு எதிரான எழுச்சியின் சிறு ஆரம்பம்.

இந்த எழுச்சியைக் கண்டு அரசு நடுங்குகிறது. ஜனதா விமுக்தி பெரமுன 1971ஆம் ஆண்டில் நடத்தியது போன்ற கிளர்ச்சியை நடத்தப்போகிறது. மந்திரிகள், எம்.பி.க்களைக் கொல்லத் திட்டமிட்டிருக்கிறது என்ற அரசின் அறிவிப்பு அதன் நடுக்கத்தை ப[illegible]டுகிறது.

அந்த நடுக்கத்தைப் போக்கச் சர்வாதிகாரத்தைத் துணைக்கு அழைக்க அரசு முயலாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

எத்தெனியாவில் வைத்து ஜனாதிபதி கூறியது என்ன?

பயங்கரவாதம் தொடரும்வரை தேர்தல் நடத்தப்படமாட்டாது. சர்வசன வாக்கெடுப்பு மூலம் பதவிக் காலத்தை நீடித்து அமைச்சர்களை மாற்றிக்கொண்டிருப்பேன் — என்றார்.

சனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்து விட்டு, சர்வாதிகாரத்தைக் கட்டி எழுப்பும் வேலை அல்லவா அது?

ஜே.வி.பி. கிளர்ச்சி, சதி, அது இது என்பதெல்லாம் பிற்கொண்டு மேற்கொள்ளப்படவிருக்கும் பாசிச நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் போர்வைகளாக ஏன் இருக்க முடியாது?

● தமிழர் படுகொலையை நிறுத்துக

சென்னை, மே 6

இலங்கைத் தமிழர் படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இந்திய மத்திய அரசை மேற்கண்டவாறு கோரும் தீர்மானம் நேற்று சென்னையில் நடைபெற்ற இந்திரா காங்கிரஸ் தமிழ் நாடுக் கிளைச் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

புதிய வன்முறைகளுக்கு தமிழர் இலக்காகின்றனர் இதை செயற்குழு கண்டிக்கிறது.

தமிழர் பகுதிகள் மீது விதிக்கப்பட்ட பொருளாதார முற்றுகை நீக்கப்பட வேண்டும்.

இப்படி அத்தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டுள்ளது (இ-எ)

ஆப்கன் - இந்தியா உடன்பாடு

காபூல், மே 6

கைத்தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் திட்டங்களைச் செயல்படுத்துவது சம்பந்தமான உடன்பாடு ஒன்று ஆப்கானிஸ்தான் — இந்தியப் பேச்சுக்களின்போது உருவாக்கப்பட்டது.

ஆப்கன் - இந்திய கூட்டுப் பொருளாதாரக் கமிஷனின் இரண்டு நாள் கூட்டம் முடிந்தபோது இந்த உடன்பாடு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பேச்சுக்களில் இந்திய தரப்பில் அமைச்சர் திவாரியும் ஆப்கன் தரப்பில் அமைச்சர் வாசிலும் கலந்துகொண்டனர். (இ-எ)

ரஷ்யா - அமெரிக்கா

தவறான தகவல்களால் அணுயுத்தம் மூளுவதை தடுக்க உடன்பாடு

ஜெனிவா, மே 6

தற்செயலாக, தவறான தகவல்களின் அடிப்படையில் அணு ஆயுத யுத்தம் ஒன்று ஏற்படுவதைத் தடுக்கும் உடன்பாடு ஒன்று அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே ஏற்பட்டுள்ளது.

ஜெனிவாவில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆயுதக் குறைப்பு மாநாட்டில் ரஷ்ய, அமெரிக்க அதிகாரிகள் மத்தியில் இது சம்பந்தமான உடன்பாடு காணப்பட்டது.

இரண்டு நாடுகளிலும் அணு யுத்த ஆபத்து தடுப்பு நிலையங்கள் அமைக்கப்படுவதற்கு இந்த உடன்பாடு வழி செய்யும்.

இரண்டு நாடுகளின் தலைவர்களும் இதனை ஏற்றுக்கொண்ட பின்னர் தான் உடன்பாடு அமுலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டது (இ-எ)

ஆயுத விற்பனை

பகிரங்க விசாரணை ஆரம்பமானது

வாஷிங்டன், மே 6

ஈரான் ஆயுத விற்பனை விவகாரம் குறித்து பகிரங்க விசாரணை கடந்த செவ்வாய்க்கிழமை வாஷிங்டனில் ஆரம்பமானது.

வாட்டர்கேட் பகிரங்க விசாரணைக்குப் பிறகு பரபரப்பாக நடத்தப்படும் விசாரணையாக இது கருதப்படுகிறது.

ஈரானுக்கு ஆயுதம் விற்றது, அதனூடு கிடைத்த வருமானம் நிக்கரகுவாவில் அரசுக்கு எதிராக கிளர்ச்சி நடத்தும் கொன்ரா கெரில்லாக்களுக்கு வழங்கப்பட்டது பற்றிய சகல அம்சங்களும் விசாரணை செய்யப்படவுள்ளன.

ஓய்வுபெற்ற விமானப் படை அதிகாரி ரிச்சர்ட் செக்கோட் என்பவரின் சாட்சியம் முதலில் பதிவு செய்யப்பட்டது.

அதிபர் றேகன் நிர்வாகத்துக்குத் தெரிந்துதான் நிக்கரகுவா கிளர்ச்சிக்காரருக்கு உதவிகள் வழங்கப்பட்டன என்று அவர் அப்போது தெரிவித்தார். (இ-எ)

பதவி நீக்கம்

டாக்கா, மே 6

பங்களாதேஷ் ஜனாதிபதி முகமட் எர்ஷாத், தனது வெளிநாட்டமைச்சரைப் பதவி நீக்கம் செய்தார் (இ-எ)

பனம் நாரிலிருந்து கண்ணாடி பிரேம்

சென்னை, மே 6

பனம் நாரிலிருந்து கண்ணாடிக்குப் பாவிக்கும் கண்ணாடி பிரேம் தயாரிக்கும் தொழிற்சாலை தமிழ்நாட்டில் திறக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னோடியாக பனம் நாரில் கண்ணாடி பிரேம் செய்வது பற்றி பயிற்சி பெற்றுவர இரண்டு பேரை தமிழக அரசு ஜப்பானுக்கும், ஜேர்மனிக்கும் அனுப்பத் தீர்மானித்துள்ளது.

முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரனின் இந்த முடிவை தமிழக சட்டசபையில் சத்துணவு அமைச்சர் திரு ஆர் சௌந்தரராஜன் வெளியிட்டார்

கடந்த ஆண்டில் 77 லட்சம் ரூபா பெறுமதியான பனம் நார் மற்றும் உபபொருட்களை மேற்கு ஜேர்மனிக்கும், ஜப்பானுக்கும் தமிழக அரசு ஏற்றுமதி செய்தது.

இந்தியாவில் 8 கோடி பனைமரங்கள் உள்ளன. அவற்றில் ஐந்து கோடி பனைமரங்கள் தமிழ் நாட்டில் உள்ளன.

பனம் பொருள் அபிவிருத்திக்கு என்று சபை ஒன்றை நிறுவுவது பற்றி அரசு பரிசீலனை செய்கிறது. சபை ஒன்றை நிறுவத் தீர்மானிக்கப்பட்ட பின்னர், அதிக பனைமரங்கள் இருக்கும் மாவட்டத்தில் அது நிறுவப்படும்.

இப்படி சத்துணவு அமைச்சர் சௌந்தரராஜன் தெரிவித்தார். (இ-எ)

வெளி உலகில்

இலங்கை உட்பட 5 நாடுகள் நீக்கம்

ஒஸாகா, மே 6

ஆசிய அபிவிருத்தி வங்கி இயக்குநர்கள் சபை உறுப்பினர் பதவியில் இருந்த இலங்கையும் மற்றும் நான்கு நாடுகளும் விலக்கப்பட்டன.

சீனாவுக்கு வங்கி இயக்குநர் சபையில் இடமளிப்பதற்காகவே இந்நாடுகள் விலக்கப்பட்டன.

விலக்கப்பட்ட ஏனைய நாடுகள் வருமாறு; ஆப்கானிஸ்தான், லாவோஸ், மாலைதீவு, வியட்நாம்.

கடந்த வாரம் நடந்த வங்கிக் கூட்டத்தில் வங்கி உறுப்பினராக சீனா தெரிவு செய்யப்பட்டது.

இயக்குநர் பதவியில் இருந்து இலங்கையை விலக்கிய செயல் குறித்து நிதி அமைச்சர் ரொனி டி மெல் தனது ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் வெளியிட்டார். (இ-எ)

லெபனான் பிரதமர் இராஜினாமா

லண்டன், மே 6

லெபனான் பிரதமர் கராமி தமது பதவியை இராஜினாமாச் செய்தார்.

லெபனான் எதிர்நோக்கும் பிரச்சினையைத் தீர்க்க தனது அரசு காரணத்தினாலேயே இராஜினாமாச் செய்வதாக அவர் அறிவித்தார்.

லெபனான் ஜனாதிபதி அமின் ஜெமாயில் புதிய ஒருவரை பிரதமராக நியமிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது (உ)

தமிழரை பலிக்கடாக்களாக்கிய இந்தியக் கொள்கை

ஈழம் என்ற கோரிக்கை- இந்திய மக்களின் பொதுக்கருத்தின் அடிப்படையில் தவிர்த்து ஐக்கிய இலங்கைக்கு உட்பட்டதாக சமாதானமாக ஒரு அரசியல் தீர்வை உருவாக்குவது சரியான வரையறைகளுக்குள் அடங்குவதாயிருக்கும்.

ஆயினும் சிக்கலான ஒரு பிரச்சினையில் எழும் குறிப்பிட்ட சில நிலைகளைப் பொறுத்தளவில் இவ்வரையறை ஒரு பொதுவான கொள்கை விளக்கமாகவும் வழிகாட்டும் கோட்பாடாகவும் மட்டுமே விளங்க முடியும்.

பிரச்சினையின் உண்மையான கரு- அதன் பல்வேறு அம்சங்கள்- சம்பந்தப்பட்டுள்ள உணர்வுகள் ஆகியவற்றைப் பொறுத்தளவில் அவற்றைச் சரியாக இனங்கண்டு பிடிக்கத் தவறிவிட்டதுடன்- மேலெழுந்தவாரியான உணர்வு மட்டுமே தமக்கு உண்டென்பதை பிரதம மந்திரி ராஜீவ் காந்தி தமது பகிரங்க அறிக்கைகள் மூலமும் அவ்வப்போது அவர் இரு சாராரின் முக்கியஸ்தர்களுடன் கலந்து பேசியபோதும் காட்டியுள்ளார்.

இவற்றின் நேரடி விளைவாகவும்- திடீர் நடவடிக்கைப் பாணியாலும் இந்தியாவின் உத்தியோக கொள்கை தெளிவற்றதாயும் சலனமானதாயும் இருக்கிறது.

இதன் காரணமாக இந்திய அரசின் கொள்கை நெருக்கடியின் பலிக்கடாக்களான இலங்கைத் தமிழரையும்- ஆக்கிரமிப்பாளரான இலங்கை அரசாங்கத்தையும் அதன் உள்நாட்டு வெளிநாட்டு சகபாடிகளையும் சமநிலையில் வைத்துக் கணிக்க வழிகோலியுள்ளது.

சில வேளைகளில் இலங்கை அரசாங்கத்தையும்- சிலவேளைகளில் தமிழ்த் தீவிரவாதிகளையும் குற்றம் சாட்டுவதும் அதே நேரத்தில் ஏதோ திடீர் தீர்வு காண வேண்டும் என்ற நிலைமையைத்தவிர இந்தியா சிபாரிசு செய்யக்கூடிய தீர்வு எதுவாயிருக்கும் என்பது பற்றி எவ்வித தெளிவான வழி காட்டலுமின்றி இருப்பதும் இந்திய அரசின் கொள்கைத் தெளிவின்மை- சலனநிலை ஆகியவற்றால் எழுந்ததேயாம்.

பிரச்சினையின் முக்கிய அம்சங்களில் முன்னேற்றம் காணக்கூடிய வாய்ப்புக்கள் தோன்றுவதாய்த் தெரிந்த வேளைகளிலும் கூட நிலைமை விரைவாகவும் கடுமையாகவும் மோசமடைய விடப்பட்டது.

இலங்கைப் பிரச்சினையில் காணப்படும் ஒரு முரண்பாட்டு நிலை இதற்குக் காரணம் பிரச்சினையின் அடிப்படை பற்றியோ அல்லது பேச்சுவார்த்தையின் போது தோன்றக்கூடிய பல்வேறு இடைவெளிகளை நிரப்புவது பற்றியோ போதுமான அளவு தீவிர கவனம் செலுத்தாமையேயாகும்.

இந்த நிலைமைக்கான பொறுப்பின் ஒரு பாரிய பங்கினை இந்திய அரசின் கொள்கை காரணமாக இந்தியா ஏற்கவேண்டியுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள அரசியல், சமூக, சரித்திர- மனநிலை ஒருபுறம்- மறுபுறம் இன்றைய அரசாங்கத்துடனான தொடர்பும் 'தீவிரவாதிகள்' 'மிதவாதிகள்' ஆகியோருடனான தொடர்பும் என்ற வகையில் பல்வேறு முறைகளை இந்திய அரசு கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது.

மிக [illegible] (4 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையின் அவசர நிலைமை; இந்தியா செய்ய வேண்டியது என்ன?

இந்தத் தலைப்பில் 15-4-1987 'இந்து' இதழில் வெளியான ஆசிரிய தலையங்கத்தின் மூன்றாவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

பொய்யாமொழி

குறள்:

மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படுஞ் சொல்.

பொருள்:

மக்களுக்கு இயற்கையறிவு மனத்தால் ஏற்படும்; [illegible] மதிக்கப்படும் சொல், சேர்ந்த இனத்தால் ஏற்படும்.

சமய சந்நிதிகளில்

சிவகாமசுந்தரி அம்மன் கோவிலில்

திருநெல்வேலி, மே 7

யாழ்ப்பாணம் திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்மன் தேவஸ்தானத்தில் வருடாந்த மகோற்சவம் கடந்த திங்கட்கிழமை காலை 11-00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு சிறப்பாக உற்சவம் நடைபெறும்.

11ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8-00மணிக்கு தேர் உற்சவமும் 13ஆம் திகதி புதன்கிழமை காலை 8-00 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறஇருக்கின்றன (இ-143)

வருடாந்த மகோற்சவம்

பூநகரி செட்டியகுறிச்சி [illegible] கோவில் வருடாந்த மகோற்சவம் கடந்த 5ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

சித்திரா பூரணை தினத்தில் நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் இம்மகோற்சவம் நிறைவு பெறும்.

பிரம்மஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் கிரியைகளை நடத்தி வருகிறார் (இ-7)

வாசகர் திருமுகம்

ஷெல் அடிக்கு எதிரான போராட்டம்

யாழ் குடாநாட்டில் குண்டு பொழிதல் நிறுத்தப்பட்ட பொழுதிலும் ஷெல் அடிப்பது தீவிரமாக்கப்பட்டுள்ளது

ஷெல் அடியினால் பொருட் சேதம் மட்டும் அல்லாது உயிர்ச்சேதங்களும் நாளாந்தம் ஏற்படுகின்றன

ஷெல் அடியினால் பாதிக்கப்படுகின்றவர்கள் கச்சேரிக் கட்டடத்துக்குள் தஞ்சம் புகுந்து ஆட்சியாளர்களுக்கு நெருக்கடியை உண்டாக்குவதே இன்று எமக்கு விடப்பட்டுள்ள ஒரே ஒரு சாத்வீகப் போராட்ட வழி ஆகும். அப்படிச் செய்வதன் மூலம் குடாநாட்டு மக்கள் ஷெல் அடியால் எவ்வளவுக்கு பாதிக்கப்படுகிறார்கள் என்பது சரியாகப் புரியவரும்.

இந்த வழியை நாமெல்லோரும் முழுமூச்சுடன் அமுல்நடத்துவோமேயானால் நிச்சயமாக அரசாங்கம் ஷெல் அடிப்பதையும் நிறுத்தவேண்டிய நிலை ஏற்படும்.

அரசாங்கம், கச்சேரி செயலிழப்பதை, ஒரு போதும் விரும்பமாட்டாது.

எனவே குடாநாட்டில் ஷெல் அடியினால் பாதிக்கப்படும் எவராக இருந்தாலும் கச்சேரிக்குள் புகுந்து மறியல் போராட்டம் நடத்துவதைத் தவிர வேறு மாற்றுவழி ஒன்றும் இல்லை என்றே நான் கருதுகிறேன்.

க. ஜெயராஜா
காரியதரிசி, யாழ் [illegible] சங்கம்

திருநெறிய தெய்வீக மாநாடு

யாழ்ப்பாணம், மே 7

ஆளுடைய பிள்ளை [illegible] அவருக்கு அப்பன் தந்தவை சில. பின்னை அப்பனிடம் கேட்டுப் பெற்றவை பல.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் திருநெறிய தெய்வீக மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய ஆதீனச் செயலாளர் திரு. மு. சிவராசா முன்கண்டவாறு தெரிவித்தார்.

அப்பனிடம் பிள்ளை பெற்ற அருட்பரிசுகள் என்ற பொருள் பற்றி திரு. சிவராசா பேசினார். (இ 7)

ரமழான் சிந்தனை

எங்கள் அல்லாஹ் கூறுகின்றான் "பொறுமையாளர்கள் கொடுக்கப்படுவார்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படும் கூலி அளவுடையதாக இருக்காது"

மௌலவி
ஏ. ஆர். எம். நவஸீர்

உதவி ஆசிரியர்
போட்டிப் பரீட்சைக்கான
வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன
தொடர்பு:- நிர்வாகி
"கெயின்ஸ்"
நெல்லியடி
(1345)

உதயன்
07 05 1987 வியாழக்கிழமை

கெயின்ஸ்
நெல்லியடி
G. A. Q 1988
வகுப்புகள் நடைபெறுகின்றன
(1365)

வல்வை இராணுவ முகாமுக்கு ஆயுதம், உணவுப் பொருள்!

வல்வெட்டித்துறை, மே 7

வல்வை இராணுவ முகாமிற்கு ஆயுதங்கள் உணவுப் பொருள்கள் கடந்த செவ்வாய் கப்பல் மூலம் வந்து சேர்ந்தன.

காங்கேசன்துறையில் இருந்து மூன்று பாரிய கப்பல்களில் இப்பொருள்கள் வந்து சேர்ந்தன.

இரு விசைப்படகுகள் மூலம் ஆயுதங்கள் கரைக்குக் கொண்டு வரப்பட்ட சமயம் நடுக்கடலில் ஒரு கப்பல் நங்கூரமிட்டு நின்று கொண்டிருந்தது.

இன்னொரு கப்பல் பருத்தித்துறைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையே ரோந்து சேவையில் ஈடுபட்டு இருந்தது.

வல்வை இராணுவ முகாமில் இருந்து அச்சமயம் ஷெல் தாக்குதலும் இடம்பெற்றது.

இராணுவ முகாமின் அருகில் ஒரு பொம்மர் விமானமும் ஒரு ஹெலிக்கொப்டரும் வட்டமிட்ட போதும் எவ்வித தாக்குதலும் மேற்கொள்ளப்படவில்லை (இ-எ-160)

பாதுகாப்புக் கருதி

சென் பீற்றர்ஸ் தேவாலய ஆராதனை

மீண்டும் இடம் மாறுகிறது

யாழ்ப்பாணம் மே 7

யாழ்ப்பாணம் சென் பீற்றர்ஸ் தேவாலய ஞாயிறு ஆராதனை இரண்டாவது தடவையாக இடம் மாறுகின்றது.

சுப்பிரமணியம் பூங்காவுக்கு அருகாமையில் உள்ள சென் பீற்றர்ஸ் தேவாலயம் கோட்டையில் இருந்து ஏவப்பட்ட ஷெல்லினால் சேதமடைந்ததை அடுத்து ஆராதனை இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள இறைவிட் தேவாலயத்தில் நடைபெற்று வந்தது.

தற்போது பாஷியார் வீதி, பிரதான வீதி ஆகியவற்றினூடாக கோட்டையில் இருந்து சிப்பாய்கள் அடிக்கடி துப்பாக்கிப் பிரயோகம் செய்வதால் இறைவிட் தேவாலயமும் பாதுகாப்பு அற்றதாகக் காணப்படுகிறது.

இதனை அடுத்து சென் பீற்றர்ஸ் தேவாலய ஆராதனையை சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் காலை 8 30 மணிக்கு யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் ஆராதனை ஆரம்பமாகும்.

சென் பீற்றர்ஸ் தேவாலய சேகர குருவான அருட் திரு. கே பி கோவிந்தராஜ் தெரிவித்தார் (இ)

பாடசாலை அபி. சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் மே, 7

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் அதிபர் கா. சந்திரபாலன் தலைமையில் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் நலன் விரும்பிகளாக புதிதாகச் சேர விரும்புவோர் விண்ணப்பங்களை இம்மாதம் 8 ஆம் திகதிக்கிடையில் சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர் (இ-ரி)

கறுப்புப்பட்டி அணிந்த எம்.பி.க்கள்

கொழும்பு, மே 7

சுதந்திரக்கட்சி எம் பி. களும் மகாசன எம் பி திரு தினேஷ் குணவர்த்தனா, கலவான எம். பி திரு டி யூ குணசேகரா ஆகியோரும் கறுப்புப் பட்டி அணிந்து நாடாளுமன்றம் சென்றனர். (இ-ஏ)

காப்புறுதி ஊழியரும் நேற்றுப் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், மே 7

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன ஊழியர்களும் நேற்று வேலைகளைப் பகிஷ்கரித்தனர்.

அரசின் போதனா வைத்தியசாலையை அகற்றும் நடவடிக்கைகளை எதிர்த்தே இவர்கள் பகிஷ்கரிப்புச் செய்தனர்.

கடந்த வாரம் காப்புறுதிக் கூட்டுத்தாபன வளவில் ஒரு ஷெல் குண்டு வந்து விழுந்ததாகவும், காப்புறுதிக் கட்டடத்திற்கு பாதுகாப்பு உறுதி இல்லை என்றும் கூட்டுத்தாபன ஊழியர் ஒருவர் தெரிவித்தார் (இ-ள)

அரச லிகிதர் சேவைச் சங்கம் ஆதரவு

யாழ்ப்பாணம், மே 7

போதனா வைத்தியசாலையை மூடக்கோரும் அரசின் நடவடிக்கைக்கு எதிராக நடைபெறும் சகல நடவடிக்கைகளுக்கும் போராட்டங்களுக்கும் அரசாங்க லிகிதர் சேவை சங்கம் ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கும்.

சங்கத் தலைவர் திரு. இ தவராசா இவ்வாறு தெரிவித்தார் (இ-ள)

பிரிவினையை. . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஞர்களைவிடுத்தது

கண்ணீர்ப் புகையில் திரவம்

டாக்டர் டி சில்வா மேலும் சொன்னதாவது:-

குண்டடித்தடி, கண்ணீர்ப்புகையினால் ஏற்பட்ட காயமல்ல இது. கண்ணீர்ப் புகையில் ஏதோ திரவம் கலக்கப்பட்டுள்ளது. அதனால் எனது கால் எரிந்தது.

திடீரென்று எனது காற்சட்டை எரிந்தது. பின்னர் எனது கால் எரிந்தது.

அரசின் தனிப்பட்ட இராணுவம்

மே தினத்தைக் குழப்பியவர்கள் அரசின் தனிப்பட்ட இராணுவமே.

1977இல் இன்றைய அரசு பதவிக்கு வந்ததும் இத்தனிப்பட்ட இராணுவமே செயற்பட்டது. எதிராளிகள் தாக்கப்பட்டனர்.

அரசு பதவிக்கு வந்த இரண்டு மாதங்களுக்குப் பின்னர் மலையகத் தொழிலாளர்களையும் இந்தத் தனிப்பட்ட இராணுவமே தாக்கியது.

1983 கலவரத்தைத் தமிழருக்கு எதிராக இத்தனிப்பட்ட இராணுவமே நடத்தியது.

இதுவரை மறைமுகமாக நடந்து வந்தவை இப்போது பகிரங்கமாக நடைபெறுகின்றன.

நிக்கரகுவா உதவிக்கு ஒத்தது

ஜனாதிபதி றேகன் நிக்கரகுவா கிளர்ச்சிக்காரர்களுக்கு மருந்துவகை வழங்க உதவுவதாகக் கூறி நிதியுதவி செய்கின்றார்.

தமிழ்நாடு அரசின் நடவடிக்கை அதைத்தான் எனக்கு நினைவுபடுத்துகின்றது.

தமிழ் நாட்டின் நடவடிக்கையை இந்திய அரசு அங்கீகரித்து விட்டது.

இந்தியா பிரிவினையை அங்கீகரிக்கப் போவதற்கான முதல் அறிகுறி இது என்று கருதவேண்டியுள்ளது;

இப்படி டாக்டர் டி சில்வா சொன்னார். (இ-எ)

பள்ளமடுக் கொலை;

சடலங்களில் இருந்த மோதிரம், கைக்கடிகாரத்தையும் சிப்பாய்கள் அபகரித்தனர்

இளவாலை, மே7

இளவாலையைச் சேர்ந்த ஒருவரையும் முஸ்லிம் இளைஞர் ஒருவரையும் சுட்டுக்கொன்ற சிப்பாய்கள் இளவாலை வாசியிடமிருந்த அடையாள அட்டை, மோதிரம், கைக்கடிகாரம், தஸ்தாவேஜ் அடங்கிய கோவை, 1500 ரூபா வரையிலான ரொக்கப் பணம் ஆகியவற்றை அபகரித்தனர்.

கடந்த 28 ஆம் திகதி இச்சம்பவம் நடந்தது.

இதில் இறந்த இளவாலை 'வடக்கு வாசியின் பெயர் ஏழூர்நாயகம் ஈஸ்வரம் (குகன்)ஆகும் 28 வயதான இவர் இருபிள்ளைகளின் தந்தையாவார்—

மன்னார் கச்சேரியில் புள்ளிவிபர ஆய்வாளராகக் கடமையாற்றினார்.

இறந்த முஸ்லிம் நாச்சிக்குடாவைச் சேர்ந்தவர்.

மன்னார்-சங்குப்பிட்டி 812 இலக்கப்பாதையில் பிரயாணிகளுடன் யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்ஸில் இவர்களும் இருந்தனர்.

சம்பவ தினம் இந்த இருவரையும் சிப்பாய்கள் பஸ்ஸில் இருந்து இறக்கி அதே இடத்தில் வைத்து சுட்டுக்கொன்றனர்.

பின்பு சடலத்தைக் காட்டுக்குள் இழுத்துச் சென்றனர்.

இவர்கள் பயணம் செய்த பஸ் தள்ளாடி முகாமுக்கு மறித்து ஏற்றிச்சென்ற காரணத்தால் திருப்பிச்செல்ல அனுமதிக்கப்படவில்லை.

பள்ளமடுவுக்கும் கள்ளியடிக்கும் இடையில் சந்திக்குளத்தில் இக்கொலைகள் நிகழ்ந்தன.

பின்னர் மன்னார் கச்சேரி ஊழியர்களும், ஹற்றன் 3 வெவலி, மன்னார் இ போ. ச. சாலை ஊழியர்களும் தேடி அலைந்ததன்பயனாக மே தினமான வெள்ளி காலை காட்டினுள் அடிமரத்தடியில் உருக்குலைந்த நிலையில் சடலங்களைக் கண்டெடுத்தனர்.

கொண்டுவர முடியாதளவு பழுதடைந்ததன் காரணமாக 3 ஆம் திகதி ஞாயிறன்று முஸ்லிம் இளைஞரின் சடலத்தை சமயாசார முறைப்படி அடக்கம்செய்த பின்னர் ஈஸ்வரத்தின் சடலத்தை தகனம் செய்து அஸ்தியை பிறந்தகத்துக்குக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

உதவி அரசாங்க அதிபர் திரு சண்முகநாதன், கிராமசேவையாளர் திரு. சிவஞானம், விடத்தல்தீவு கிராம சேவையாளர் ஆகியோர் இவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். (இ-48)

மன்னாரில்....

(1ஆம் பக்க தொடர்ச்சி)

வந்த சிப்பாய்கள் சில ஆண்டுகளுக்கு முன்னர் கண்ணிவெடியில் இராணுவ வாகனம் சேதத்துக்குள்ளான இடத்தை பார்வையிட்டனர்.

அந்நேரம் அவ்விடத்துக்கு மாடு மேய்க்கச் சென்ற ஒருவரை சிப்பாய்கள் எச்சரித்தனர்.

அவரிடம் விடுதலைப் புலிகள் பற்றி விசாரித்ததாகவும் தெரிய வருகின்றது. (இ-ச-160)

மேலதிக..

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

தால் இப்போது எரிபொருள்களைப் பாவித்து அனல் மின்சார உற்பத்தி செய்யப்படுகிறது.

அதனால் மின்சாரக் கட்டணத்தோடு மேலதிகமாக எரிபொருள் கட்டணமும் இன்று தொடக்கம் அறவிடப்படுமென மின்சார சபை அறிவித்தது. (அ)

விரிவுரை - - -

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக நிர்வாகத்துடன் தொடர்புடையது நாம் செய்வதற்கு ஒன்றுமில்லை. நிலைமையை பொறுத்து இருந்துதான் பார்க்க வேண்டும்'' -இப்படி பிரதி பொலிஸ் மா அதிபர் நீல் வீரசிங்க தெரிவித்தார். (இ-எ)

முதலாவது நினைவஞ்சலி



அராலியூர்

திருமதி நாகலிங்கம் செல்லம்மா

இறப்பு: 7—5—86

பாசத்தின் உறைவிடமாக இருந்து எங்களை எல்லாம் வழிநடத்தி வீர்களே! ஆதரவற்றவர்களுக்கும், அனாதைகளுக்கும் அன்புக்கரம் நீட்டி ஆதரித்தீர்களே! அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள்: நடராசா கனகம்மா (மலேசியா) பொன்னுத்துரை இராசமணி, சிற்றம்பலம் சிவபாக்கியம் (மலேசியா), கந்தசாமி இராசலட்சுமி (அவுஸ்திரேலியா), குகராசா, பொருளாளர், தமிழ் பிரதேச பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழு நடேஸ் செல்வலட்சுமி, சிவசுப்பிரமணியம் தனலட்சுமி (மலேசியா) கனகசபாபதி மகாலட்சுமி, இராசசுந்தரம் பதில் தலைவர் முன்னைய கிராமசபை மன்றம், அராலி.

மருமக்கள்: கந்தசாமி (அவுஸ்திரேலியா) கனகரவி, புவனேஸ்வரி, பரமேஸ்வரி.

பேரப்பிள்ளைகள்: பொன்னுத்துரை (சீமெந்து உற்பத்தி தொழில் நுட்பவியலாளர்) நலமலர், இரத்தினமலர் (மலேசியா) பாலசிங்கம் (மலேசியா) கமலமலர் (மலேசியா) சிவானந்தன் பொது முகாமையாளர் சிங்கை துறைமுகசபை. நிர்மலாதேவி (மலேசியா) டாக்டர் குண மகப்பேறு ஆலோசக நிபுணர் (மலேசியா), டாக்டர் மங்களவேணி இருதய ஆலோசக நிபுணர் (மலேசியா) ஜெயமலர், மகேந்திரன் மின்பொறியியலாளர் (இங்கிலாந்து) சாரதா (இங்கிலாந்து), மகேந்திரன் பட்டய மின்பொறியியலாளர் (பணிப்பாளர், மலேசியா) இராஜேஸ்வரி (மலேசியா) தருமத்துரை (மலேசியா) விஜயலக்சுமி (மலேசியா) ரகுநாதன் விஞ்ஞான ஆலோசகர் (அவுஸ்திரேலியா) நிலா (அவுஸ்திரேலியா), குண கணக்காளர் (இங்கிலாந்து) சாமிநேசன் (சவூதி) வீணா (சவூதி) திருமூர்த்தி கணக்காளர் (இங்கிலாந்து) திருச்செல்வம் (மலேசியா) சுபத்திராதேவி (மலேசியா) டாக்டர் மனோ Phd இரசாயனம் (மலேசியா) புனிதவதி (மலேசியா) குண பட்டய சிவில் பொறியியலாளர் (பணிப்பாளர், மலேசியா) மோகனதாஸ் பெற்றோலிய சுத்திகரிப்பு தொழில் நுட்பவியலாளர், கலாநிதி அருள்வடிவன் இலத்திரனியல் பொறியியலாளர் (இங்கிலாந்து) சாந்தா பட்டயக் காரியதரிசி (மலேசியா) சிவஜோதி கணக்காளர் (மலேசியா) சிறீகாந்தஜோதி (அவுஸ்திரேலியா) சிவபாலன், பூரவாகினி, சிற்சபேசன் (சிடேஸ்) மதிப்பீட்டாளர் (மலேசியா) சதாருபன் பரிஸ்டர் (மலேசியா) நடேசபேசன் (மதிப்பீட்டு ஆலோசகர் (இங்கிலாந்து) சதானந்தன் (மலேசியா) சந்திரரூபன் (இங்கிலாந்து) மகேஸ்வரன் (இந்தியா) பார்த்திபன் (இங்கிலாந்து) கனகசிங்கம் பெற்றோலிய நிர்வாக தொழில் நுட்பவியலாளர் (மலேசியா) ரேவதி (மலேசியா), கௌரிமனோகரி, சிவரூபன் (மலேசியா) நந்தினி, டிரேதி (அவுஸ்திரேலியா) வாசுகி, நாகநாதன், நந்தேசன், நாகலிங்கம், சசிகலா, அகிலன், பரமதி, சாமினி

பூட்டப்பிள்ளைகள்: சிவதயாளன் (சபா) மேரி (சபா) சிவநேசன் (மலேசியா) சிரூபவதி (மலேசியா) பாலசுரேன் (மலேசியா) சிவமோகன் (மலேசியா) கவநந்தினி (மலேசியா) குணசிங்கம் (மலேசியா), ஜெயந்தன், தாரணி, (அவுஸ்திரேலியா) சேசினி (அவுஸ்திரேலியா) அஜந்குமார் (அவுஸ்திரேலியா) சுரேந்திரன் (மலேசியா) விக்னன் (மலேசியா) சேரன் (மலேசியா) சோழன் (மலேசியா) கிரன் (மலேசியா) சங்கீதா (மலேசியா) வைசினி (மலேசியா) கவிஞ (மலேசியா) சிவாரன் (இங்கிலாந்து) கிருஷ்ணி (மலேசியா) சஜானு (மலேசியா) பிருந்தா (மலேசியா)

(1308)

தமிழரைப் பலி....

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

விருந்து கிடைக்கப்பெறும் திறமையற்ற குழப்பம் மிக்க வழிகாட்டலின் அடிப்படையில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக இவ்விடயங்களில் ஈடுபட்டு வந்த பண்டாரிகளும் சிதம்பரங்களும் இந்திய கொள்கையின் நம்பகத்தன்மையைக் குறைக்கவும் பாதிக்கப்பட்டவர்களுடனான பிணைப்பைக் குறைக்கவும் கூடியவகையில் செயற்பட்டுள்ளார்கள்.

இப்பிரச்சினை சம்பந்தமாக கிடைத்துள்ள குழப்பமான செய்தி வருமாறு:

இலங்கைத் தமிழர் பகுதிகளில் இருந்து கிடைத்த செய்திகளின் படி 1986 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பெங்களூரிலும் வேறு இடங்களிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு வி. பிரபாகரனுக்கு ஸ்டேட் மந்திரி நிலையில் உள்ளவர் மூலம் ஒரு செய்தி தெரிவிக்கப்பட்டது.

அச் செய்தி இனப்பிரச்சினைக்கு ஒரு விரைவான தீர்வு காணப்படாவிடில் ஜெயவர்த்தன அரச இராணுவத் தீர்வு காணும் நோக்கில் ஆயிரக்கணக்கான தமிழ் பொதுமக்களைக் கொன்றொழித்து விடப்போவதாக பயமுறுத்துவதாலும் இவ்விடயத்தில் இந்தியா அதன் கொள்கை வட்டத்துள் எதுவும் செய்ய முடியாதிருக்கும் என்பதுமாகும்

(வரும்)

யாழ். ஆஸ்பத்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பில் உள்ள இந்தியத் தூதுவரைச் சந்திக்கும் சாத்தியம் உண்டு எனவும் அறியவருகிறது.

பேச்சுவார்த்தை முடிவுகள் குறித்து வானொலி தொலைக்காட்சிகள் மூலமும் அறிவிக்கப்படலாம்.

இதனிடையே போதனா வைத்தியசாலைகள் அமைச்சினால் கடந்த 27 ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதம் நேற்று வரையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு வந்து சேரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரியில் பணிபுரியும் ஊழியர்களின் நிலைமை குறித்து அரசு எதுவும் விபரமாகத் தெரிவிக்காததால் அவர்களும் பெரும் அதிர்ச்சியுடன் காணப்படுகின்றனர்.

இதேவேளை ஆஸ்பத்திரியை மூடாது நிறுத்துவதற்கு நடத்தப்படும் பேச்சு இன்று தோல்வி கண்டால் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த முக்கிய அதிகாரி ஒருவர் தமது பதவியில் இருந்து விலகலாம் எனப் பலமாகப் பேசப்பட்டது. (அ-10)

உ

நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

திரு. வயிரமுத்து இராசேந்திரம்

அன்னை மடியில்: 03-10-1914
இறைவனடியில்: 06-04 1987
அந்தியேட்டி: 07-05-1987

சாந்த குண சொரூபியாய்
பண்பின் ஒளி விளக்காய்
வாழ்க்கை வழிகாட்டியாய்
என்றும் எடுத்துச் சமப்பாளுய்
நோய்நீங்க யோக வழிகாட்டியாய்
அன்பின் இருப்பிடமாய் வாழ்ந்த
எங்கள் குடும்பத் தெய்வமே
பூவுலகை மறந்து விட்டுப்
பொன்னுலகு புகுந்து விட்டீர்.

- மனைவி, சகோதரிகள், மைத்துனர்கள், சகோதரர்கள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

K. K. S. வீதி, தெல்லிப்பழை, (1306)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15, ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தாரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 07 - 05 - 1987 தொலைபேசி இல. 24805 , 23078
Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office Under Number QJ/94/News Telephone 24805, 23078